www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19.06.98

எண்ணம் .9 கிண்ணம்.6

## உலகக் கோப்பை காற்பந்து...



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எல்லோரும் ஒன்று



அந்தக் கிராமசபையில் கனகன் பணியாளனாக இருந்தான். அவனின் மேலதிகாரி வேறு இடத்திற்கு மாற்றலாகிச் செல்ல இருக்கிறார். வேலைகள் துரிதமாகச் செய்ய வேண்டியிருந்தது. கனகன் அங்கும் இங்கும் மாடிக்கும் கீழுக்குமாக ஏறி இறங்கி அலுத்துப் போனான். எங்கேயாவது ஓடிப் போய் விடலாமா? என்று தோன்றியது. வீட்டின் கஷ்டநிலையால் கிராமசபையின் ஊழியர்கள் எல்லோருக்கும் எடுபிடியாளாக வேலை செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதை யோசித்துக் கொண்டே ஒரு ஒதுக்குப் புறமாக யாருக்கும் தெரியாமல் இருந்தான். அவன் யோசனையோடு இருப்பதை மேலதிகாரி கவனித்தார். தான் மாற்றலாகிச் செல்லும் வேதனையில் கவலையோடு இருப்பதாக

www.tamilarangam.net

மேலதிகாரி எண்ணிக் கொண்டார். அவனிடம் வந்து "என்ன பலமான யோசனை?" என்று கேட்டார். அவனும் நேரடியாகவே பதில் சொன்னான். "உங்களிடம் கஷ்டப்பட்டு விட்டேன். இனி யார் வந்து வேலை வாங்கப் போகிறார்களோ? கழுதை கூட இந்த அளவிற்கு வேலை செய்யாது!" என்று சலித்துக் கொண்டான்.

அதற்கு அவர் "ஏன் கெட்டதாக நினைக்கிறாய்? நல்லதை நினை. இனி வருபவர் நல்லவராக இருப்பார் என்று நினைத்துக் கொள்." என்றார். அப்போது கனகன் "நீங்கள் சொல்லியது போலவே உங்களுக்கு முன் வேலையில் இருந்தவரும் கூறினார். ஆனால் நடந்தது வேறு. இப்போது நீங்கள் கூறுவதை மட்டும் எப்படி நம்புவது? என்றான். மேலதிகாரிக்கு அசடு வழிந்தது.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

நாடு என்ன எனக்குச் செய்தது என்பதை விட நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்று நினைத்துப் பார்.

-ஜோன் கென்னடி-

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

www.tamilarangam.net


# நோய் தீர்க்கும் மருந்து



கற்காலத்தில் கிடைக்கப் பட்ட எலும்புக் கூடுகள் அக்காலத்தில் இருந்த வருத்தங்களைத் தெரியப் படுத்துகின்றன. பற்சொத்தை, வாதம், காசம் போன்றன அக்காலத்தில் இருந்திருக்கின்றன. வருத்தங்கள் கெட்ட ஆவிகளால் வருகின்றன என்று அவர்கள் நம்பினார்கள். தலையில் துவாரமிட்டு அதன் மூலம் ஆவிகளை விரட்ட முடியும் என்றும் அவன் நம்பினான்.

நோயை விடவும் மிருகங்களாலும் அவன் அல்லல் பட்டிருக்க வேண்டும். மிருகங்களால்

www.tamilarangam.net



ஏற்படும் காயங்களுக்கும் வைத்தியம் செய்திருக்கிறான். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்கள் பபிலோனியாவில் கண்டெடுத்திருக்கிறார்கள். இவை புரோகிதர்களான வைத்தியர்களால் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

சுமேரியா, பபிலோனியா போன்ற இடங்களில் வைத்தியர்கள் பலர் வாழுந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. அறுவைச் சிகிச்சைக்கான சட்ட திட்டங்களும், பயன்படுத்தப்பட்ட கத்திகளும், வைத்தியருக்கு அளிக்கப்பட்ட சன:மானமும் களிமண்ணால் செய்யப்பட்ட இலச்சினைகளில் இருந்து கிடைத்திருக்கின்றன. சிலவகை வருத்தங்களுக்கு மூலிகை வைத்தியங்கள் செய்திருக்கிறார்கள்.

பண்டைய எகிப்தில் இருந்த வைத்தியர்களில் ஒவ்வொரு வருத்தத்துக்குமான

www.tamilarangam.net

துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் இருந்ததாகவும், கண் சிகிச்சை, மூளைச் சிகிச்சை போன்று ஒவ்வொரு துறைக்கும் பிரபலமான வைத்தியர்கள் இருந்ததாகவும் கிரேக்க சரித்திராசிரியரான ஹெரோடோடஸ் (கி.மு 460) தமது குறிப்பில் கூறியிருக்கிறார்.

நோய்களைக் கடவுளாலேயே குணப்படுத்த முடியும் என்று நம்பினார்கள். முடியாவிட்டால் கடவுளின் பிரதிநிதியான புரோகிதர் வைத்தியம் செய்வார். நோயாளி இறந்து விட்டால் பழுதடையும் உறுப்புக்கள் அகற்றப்பட்டு இறந்தவர்களின் உடல்கள் (மம்மிமுறை) பிரமிட்டுகள் போன்ற முறைகளினால் பேணப்பட்டன. இதை ஆராயும் போது மனித உடற்கூறுகளை எகிப்திய வைத்தியர்கள் எவ்வளவுக்கு அறிந்திருந்தார்கள் என்பது தெரிகின்றதல்லவா?. ஆனாலும் இக்காலத்து வளர்ச்சியை அடைய பலகாலங்கள் சென்றன.

-தொடரும்

---

ஏணியின் உச்சிப் படியில் ஏற வேண்டுமானால் அதன் கீழ்ப் படியிலிருந்து தான் ஏறத் தொடங்க வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித் தான்.

-பிதாகோரஸ்-

---

www.tamilarangam.net

# குடும்பம்



ஒற்றைக் குடும்பந் தனிலே- பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை:
மற்றைக் கருமங்கள் செய்தே- மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை

ஏவல்கள் செய்பவர் மக்கள்-இவர்
யாவரும் ஓர் குலமன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்-நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

சாதிப் பிரிவுகள் சொல்லி-அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வர்
நீதிப் பிரிவுகள் செய்வர்- அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வர்

சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்- தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

-சுப்பிரமணியபாரதி-

www.tamilarangam.net

# WORL CUP (உலகக் கோப்பை)



ஜூன் மாதம் 10ம் திகதி தொடங்கியதுதான் இது! சிலர் இதை எதிர் பார்த்து நான்கு வருடங்கள் காத்திருந்தார்கள், சிலர் இதனது முடிவுதிகதியான 13ம் ஜூலையை ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர். நீங்கள் கால்பந்தின் விசிறியோ, எதிரியோ எது ஆனாலும் கால்பந்தைப் பற்றி நீங்கள் சில விஷயங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

உதாரணத்திற்கு இது முன்பு எப்படியிருந்தது என்பது.

**1930:** உருகுவாயில் நடந்தது

-Centenario எனும் 80000 இருப்பிடங்களைக் கொண்ட விளையாட்டு மண்டபத்தில் உலகக் கோப்பை நடந்தது. இது அந்தக் காலத்தில் உலகளவில் பெரியதாக விளங்கியது.

-நான்கே நான்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே கப்பல் பயணத்தின் காரணமாக இதில் பங்கு பற்றின.

www.tamilarangam.net

-உருகுவாய் இறுதிப்போட்டியில் அர்ஜென்டீனாவை 4:2ல் வென்றது.

## 1934: இத்தாலியில்

-இறுதிப் போட்டியில் இத்தாலியே ஷேஷியனைத் தோக்க வைத்தது.
-ஜேர்மனி மூன்றாவதாக வந்தது.

## 1938: பிரான்ஸ்




-நடுவர்கள் கோட், டை போட்ட காலமிது (பார்க்க படம்)
-இத்தாலியும், பிரான்சும் இறுதிப்போட்டியில் விளையாடின.
-இத்தாலி 4:2 அடித்து பிரான்சை வென்றது.

## 1939-1945: இரண்டாம் உலகயுத்தம்

-1942ம் ஆண்டு உலகக் கோப்பை ஜேர்மனி அல்லது ப்ரேசிலில் நடக்க விருந்தது.
-சண்டையினால் இது தடுக்கப் பட்டது.

## 1950: ப்ரேசில்

-இறுதி விளையாட்டு இல்லாவிட்டாலும், கடைசி விளையாட்டு ஒன்று ப்ரேசிலுக்கும், உருகுவாய்க்கும் எதிராக நடந்தது.

www.tamilarangam.net

-பத்திரிகைகள் விளையாட்டுத் தொடங்கும் முன்னமே ப்ரேசில் வென்றதாக எழுதத் தொடங்கின.
-ஆனால் ஆச்சரியப் படும் வகையில் உருகுவாய் 2:1ல் ப்ரேசிலை வெற்றி பெற்றது.
-Maracana விளையாட்டு மண்டபத்தில் இதனைக் கண்ட 200000 பார்வையாளர்கள் ஏமாந்து போனது மட்டு மல்லாமல் அழக்கூடத் தொடங்கி விட்டார்கள்.

## 1954: சுவிஸ்

-3:2ல் உங்கார்னை வென்ற சுவிஸ்தான் இறுதிப்போட்டியிலும் வெல்லும் எனப் பலர் எதிர்பார்த்திருந்தார்கள்.
-ஆனால் ஆச்சரியம் தரும் வகையில் இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பின் முதன்முதலாக விளையாடிய ஜேர்மனியே இறுதிப் போட்டியில் வென்றது.
-"சண்டைக்குப் பின் சோர்ந்து போன எங்களுக்கு இவ்வெற்றி மனபலத்தைத் திருப்பிக் கொடுத்தது" என்றார்கள் ஜேர்மனியர்கள்.

## 1959: சுவீடன்

-ஒரு 17 வயது ப்ரேசில் விளையாட்டுக்காரன் உலகை மயக்கியது இவ்விளையாட்டில்தான்.

www.tamilarangam.net

அவன் கால்பந்து விளையாடுகிறான் என்பதை விட அவன் அதனுடன் நடனமாடுகின்றான் என்றதே பொருந்தும் என்றனர். நான் சொல்வது உலகின் சிறந்த விளையாட்டு வீரன் Pele வைத்தான.

-இறுதிப் போட்டியில் ப்ரேசில் இவனது உதவியுடன் 3:2ல் சுவீடனைத் தோற்க வைத்தது.

-உலகக் கோப்பை வரலாற்றிலேயே இறுதிப் போட்டியில் இவ்வளவு கோல் (engl.:goal; deut.:Tor) அடித்தது இவ்விளையாட்டில்தான்.

## 1962: ஷீல (Chile)

-இந்த விளையாட்டைத்தான் உலகக் கோப்பையின் வரலாற்றிலேயே சுறுசுறுப்பற்றதென்று கூறுவர்.

-ப்ரேசில் சீ.எஸ்.எஸ்.ஆர். உடன் 3:1 விளையாடி வென்றது.

## 1966: இங்கிலாந்து



-இந்தப் படம்தான் கால்பந்து உலகில் பிரசித்தி பெற்றதாக இருக்கும். இப்பந்து கோட்டுக்குப் பின்னாலேயா அல்லது முன்னாலா உள்ளது அன்ற கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

-இதனைப் பற்றி புத்தகங்கள்

www.tamilarangam.net

எழுதப்பட்டன, கொம்பியூட்டரில் சோதிக்கப் பட்டது.

-எது ஆனாலும் 4:2ல் இங்கிலாந்து ஜேர்மனியை வென்றது என்ற முடிவை மாற்றாது.

## 1970: மெக்சிக்கோ



-Pele (படம் பார்க்க) மூன்றாம் முறையாக ப்ரேசிலை வெல்ல வைத்தார்.

-இறுதிப்போட்டியில் இத்தாலியை ப்ரேசில் 1:4ல் வைன்றது.

-ஜேர்மனி Beckenbauer, Seeler, Müller போன்றவர்களோடு விளையாடி மூன்றாவதானது.

-ஜேர்மனி முதன்முதலாக உலகக் கோப்பையை கலரில் தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்தார்கள்.

## 1974: ஜேர்மனி

-ஐரோப்பியக் கோப்பையை வென்ற ஜேர்மனியே இதிலும் வென்றது.

-டீ.டீ.ஆர் இடம் தோற்ற ஜேர்மனி (BRD) தாங்கள் வெல்லுவோம் என்ற நம்பிக்கையைத் தொலைத்தாலும் இறுதிப்போட்டியில் ஹொலண்டை 1:2ல் வென்றது.

www.tamilarangam.net

**1978:** ஆர்ஜண்டீனா

-திரும்பவும் ஹொல்லண்ட் இறுதிப்போட்டி மட்டும் வந்து விளையாட்டு நடந்த நாட்டுக்குழுவுடன் விளையாடி தோற்றுப் போனது.

-ஆர்ஜண்டீனா ஹொல்லண்டை 3:1ல் வீழ்த்தியது.

**1982:** ஸ்பெயின்

-ஜேர்மனி சிறப்பாக இறுதிப்போட்டி மட்டும் விளையாடியிருந்தாலும், இந்த உலகக் கோப்பை ஜேர்மனிக்குக் கூடாத பெயரை வாங்கிக் கொடுத்தது. விளையாட்டின் போது செய்த பல Foulகளே காரணம்.

-இறுதிப்போட்டியில் இத்தாலி 3:1ல் வென்றது.

**1986:** மெக்சிக்கோ

-ஒரு குள்ள ஆர்ஜண்டீனாக்காரன் இந்த உலகக் கோப்பையின் வீரனாகத் திகழ்ந்தான். அவன்தான் Maradona (தற்பொழுது திரும்பவும் சிறையில்).

-இறுதிப்போட்டியில் Beckenbauerஇன் குழு (ஜேர்மனி) அர்ஜண்டீனாவிடம் 2:3ல் தோற்றது.

**1990:** இத்தாலி

-ஜேர்மனி இறுதிப் போட்டியில் அர்ஜண்டீனாவுடன் விளையாடியது.

www.tamilarangam.net

-Brehmeவின் கோலால் ஜேர்மனி 1:0இல் மூன்றாம் முறை உலகக் கோப்பையைப் பெற்றது.

1994: யூ.எஸ்.ஏ

-11மிற்றரிலிருந்து அடிப்பதில் ப்ரேசில் உலகக்கோப்பையைப் பெற்றது.

-ஜேர்மனி தொடக்க விளையாட்டுக்களிலேயே தோற்றது.

துன்பங்கள் சாதாரணமானவை. அவை எப்பொழுதும் பாலத்தின் அடியில் ஓடும் தண்ணீரைப் போல ஓடி விடும்.

-அன்னை சாரதாதேவி-

நாம் வாழ்வில் முன்னேறிச் செல்லும்போதுதான் நமக்கு எவ்வளவு திறமைகள் உள்ளன என்பது தெளிவாகின்றது. -.்.பிரட்

புத்தகங்கள் நமக்கு வழிகாட்டிகளாக மட்டும் இருப்பதில்லை. தனிமையில் இருக்கும் போது நல்ல நண்பன்.

-கோலியர்.-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நடு இரவுப் பாட்டு



சீலன் வீட்டில் சிறுவர்கள்
சிரித்துப் பேசி மகிழ்ந்தனர்
அம்மா அப்பா இருவரும்
அயலூர் போய் இருந்தனர்

தாத்தாவுக்கு வருத்தம் என்று
தந்தி வந்ததால்- சீலன்;
தம்பி, தங்கை இருவரையும்
தனியே விட்டுச் சென்றனர்

அடுத்த வீட்டு அருணனும்
அவனின் தங்கை அல்லியும்
துணையாய் வந்து சேர்ந்தனர்
துள்ளி விளையாடினர்

www.tamilarangam.net

இரவு வந்து சேர்ந்தது
 இருந்த உணவை உண்டனர்
நேரமாகி விட்டதால்
 நித்திரைக்குப் போயினர்

நடு இரவு வேளையே
 நல்லதாகும் நமக்கென்று
பெற்றோர் இல்லா வீட்டிலே
 புகுந்து விட்டார் திருடரும்

சத்தமின்றிப் பதுங்கியே
 சமையலறைக்குள் நுழைந்தனர்
தட்டுத் தடுமாறியே
 தட்டுப்பட்டார் சுவரிலே

சுவரில் இருந்த ஆணியில்
 சுளகு மாட்டி இருந்ததே!
தட்டுப் பட்டுச் சுளகுமே
 தரையில் விழுந்து விட்டதே!

சிறிது சத்தம் கேட்டதும்
 சீலன் எழுந்து விட்டனன்
பக்கத்திலே படுத்திருந்த
 பாலனையும் எழுப்பினன்

"வந்தவர்கள் திருடர்தான்
 வழியுமுண்டோ! துரத்தத்தான்?

www.tamilarangam.net

சிந்தனைகள் செய்தனர்
 செயலினிலே இறங்கினர்

படுத்திருந்த சிறுவர்களைப்
 பைய எழுப்பினர்-பின்பு
பலமான சத்தம் போட்டு
 பாடி ஆடினர்.

அடுத்த வீட்டுக்காரரெல்லாம்
 விழித்துக் கொண்டனர்!-விஷயம்
அறிந்து கொண்ட அவர்கள்-சீலன்
 வீட்டை அடைந்தனர்

சமையலறையில் திருடர்களை
 அடித்து விரட்டினர்- சிறுவர்
சமர்த்தியத்தை தானறிந்து
 சந்தோஷம் கொண்டனர்


-புலவர் பூங்கோதை-

தோல்வி என்பது நீங்கள் தோற்று விட்டீர்கள் என்பதற்கான அடையாளம் இல்லை. நீங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை என்பதற்கான அடையாளமே!

-ரொபேட். எச்.ஸ்கெல்லர்-

www.tamilarangam.net

## மகாபாரதம்



தருமர் அரியணையில் அரசனானது துரியோதனனுக்குப் பொறாமையாக இருந்தது. தருமர் அரியணையில் இருப்பதும், தம்பியர் நால்வரும் கூட இருந்து கடமை செய்வதும் பார்க்கப் பார்க்க வேதனையாகவும் இருந்தது. தன் தந்தையாகிய திருதராஷ்டிரனிடம் சென்றான்.

"அப்பா, அரசு முழுவதையும் தருமனிடம் ஒப்படைத்து விட்டீர்களே! அவனும் அவனின் தம்பிமாருக்கும் நாங்கள் அடங்கி வாழ வேண்டியது தானா?. பொதுவாகவே எங்களை

www.tamilarangam.net

அவர்களுக்குப் பிடிப்பதில்லை. இனி எங்கள் நிலைமை எப்படி மாறுமோ? என்று வேதனையுடன் கூறினான்.

இதைக் கேட்ட தந்தையாகிய திருதராஷ்டிரன் "மகனே, நான் பிறவியிலேயே கண்பார்வை தெரியாதவன். அதனால் என் தம்பியாகிய பாண்டுவுக்கு உரிமையாகி விட்டது. எங்கள் குலத்து வழக்கப்படி அரசுரிமை அவர்களுக்காகி விட்டது. எனவே, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் ஆட்சி செய்வதற்கு உதவுவது உன் கடமை." என்று கூறினான்.

அதற்குத் துரியோதனன் "அப்பா, போரிலே வல்லவனாகிய கர்னனும், தோள் வலிமை மிக்க என் தம்பிமாரும், என் மாமனார் சகுனியும் கூட இருக்கும் போது எனக்கு என்ன பயம்? எக்ககாலமும் பாண்டவர்களுடன் நான் ஒற்றுமையாக இருக்க மாட்டேன்." என்றான். இதனால் கவலை கொண்ட தந்தை வீஷ்மர், விதுரர், துரோணர் போன்ற பெரியோரைக் கலந்து ஆலோசித்தான்.

அரசபுத்திரர்கள் இரு பகுதியினரும் பகைவர்களைப் போல நடந்து கொள்ளுவதால் அவர்கள் ஒன்றாக வாழ்வது என்பது நம்பக் கூடியதாக இல்லை. அவர்கள் வேறிடத்தில் இருந்தால் அவர்களுக்கிடையே ஒற்றுமை

www.tamilarangam.net

ஏற்படலாம் என்று தீர்மானம் எடுக்கப் பட்டது. இது மற்றய பெரியவர்களுக்குச் சம்மதம் இல்லையாயினும், அரசனின் சொல்லுக்குக் கட்டுப் பட்டனர்.

இதனால் திருதராஷ்டிரன் தருமரை அழைத்தான். அவனிடம் "தருமா, நீயும் உன் தம்பியரும் இங்கிருந்து ஆட்சி செய்ய வேண்டாம். உங்களுக்காக வாரணாசி (காசி) நகரத்தில் மாளிகை ஒன்று கட்டச் சொல்லி இருக்கின்றேன். அஸ்தனாபுரத்தில் எனது மக்களும், வாரணாசியில் பாண்டு புத்திரராகிய நீங்களும் ஆட்சி செய்யுங்கள்" என்று கூறினான். தருமரும் "பெரியப்பா, தந்தை இல்லாத எங்களுக்கு நீங்கள் தந்தையைப் போன்றவர்கள். நீங்கள் சொல்வதை நான் செய்கிறேன்." என்று கூறினான்.

அதன்பின் ஒரு நல்ல நாளிலே பெரியவர்களின் ஆசீர்வாதத்துடன் பாண்டவர்களும் தாயாரான குந்திதேவியும் வாரணாசிக்குச் சென்றனர். அங்கு தருமன் முடி சூட்டி ஆட்சி செய்யத் தொடங்கினான். தம்பிமாரும் அண்ணனுக்கு உதவியாக ஆட்சியில் பங்கேற்றார்கள்.

-தொடரும்-

www.tamilarangam.net



# ஏழை

அமீர் பெரிய பணக்காரச் சிறுவன். அவன் அம்மாவும் அப்பாவும் அவனைச் செல்லமாக வளர்த்து வந்தார்கள். அவன் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பாளர்களுள் ஒருவராக அவனது அப்பாவும் இருந்தார். பாடசாலையிலும் அவனுக்கு மிகவும் சுதந்திரம் இருந்தது. அவனுக்கு ஒவ்வொரு வருடத்துக் கோடை விடுமுறைக்கும் எங்கேயாவது ஊருக்குப் போக வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

இந்த முறை வகுப்பு மாணவர்களை அழைத்துக் கொண்டு தலைநகரத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலைக்குச் செல்வதாகத் தீர்மானம் செய்தார்கள். முதல்நாள் வரைக்கும் ஆரவாரமாக இருந்த அமீர் சோம்பலாக இருந்தான்.



www.tamilarangam.net

அம்மா அவனைக் கவனித்தாள் "அமீர், உனக்கு என்ன செய்கிறது? உம்மாவிடம் சொல்லு" என்று அவனை அணைத்துக் கொண்டு கேட்டாள். "ஒன்றுமில்லை உம்மா" என்று சலிப்போடு கூறினான் அமீர்.


அம்மாவுக்கு எதுவுமே புரியவில்லை. அப்பா வந்தார். அப்பாவிடம் சென்ற அமீர் "வாப்பா, நான் இன்றைக்கு ஒரு இடமும் வரவில்லை" என்று மெதுவாகச் சொன்னான். அப்பா வியப்பாக அவனைப் பார்த்தார். பின் "ஏன் மகனே! உன் விருப்பப்படி தானே எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம். பின் ஏன் விருப்பமில்லாமல் இருக்கிறாய்? என்ன விஷயம் சொல்" என்றார்.

"சொன்னால் கோபிக்க மாட்டீர்களே வாப்பா. சங்கரன் காசு இல்லாத காரணத்தால் எங்களோடு சேர்ந்து வர முடியவில்லை. எல்லோரும் போய் விட்டால் சங்கரன் தனியாகத் தானே இருப்பான். சங்கரனுக்கு விளையாடக் கூட யாரும் இருக்க மாட்டார்கள். அவன் தனியாக இருக்கிறது பாவமில்லையா! வாப்பா. நான் நின்றால் அவனோடு சேர்ந்து விளையாடலாம் அல்லவா!" என்று சொன்னான்.

இந்தச் சின்ன வயதிலேயே அவனுக்கு இருக்கும் மனிதநேயத்தைக் கண்டு பெற்றோர்கள் பெருமைப் பட்டார்கள். -பாமினி அருள்வரதன்.-

www.tamilarangam.net

# கிளை



சண்முகம் தபாற்கந்தோரில் வேலை பார்த்து வந்தார். அவர் குடும்பம் பெரியது. குடும்பத்தில் அவரது பெற்றோர், அவரது மனைவி பாக்கியம், அவரது பெற்றோர், மகன் மகள் என அவர் வருவாய்க்கு மீறியதாகக் குடும்பம் இருந்தது. அதனால் அவர் கமம் செய்து வாழ்ந்து வந்தார். அன்று அவருக்கு இரு மாங்கன்றுகள் கிடைத்தது.

அவற்றை மனைவியிடமும், பிள்ளைகளிடமும் ஒப்படைத்து விட்டு வேலைக்குப் போய் விட்டார். பெரியவர்களுக்கு உதவியாக மகளை விட்டுவிட்டு மகனை அழைத்துக் கொண்டு பாக்கியம் தோட்டத்துக்குச் சென்றார். இருவரில் மகனான ரகு களைத்தபடி வந்தான். வரும்போதே “ஜனனி தண்ணீர் கொண்டு வா.” என்றான். தண்ணீரைக் கொண்டு வந்த ஜனனி “ஏதோ பெரிய வேலை செய்தது போலக் களைத்து விட்டாயே!” என்று சிரித்தாள்.

“உனக்கென்ன தெரியும். நானும் அம்மாவும் எவ்வளவு கஷ்டப்பட்டு விட்டோம். சரியாக அரை மணித்தியாலத்தில் வேலை செய்து விட்டேன்.” என்றான். அதே நேரத்தில் உள்ளே நுழைந்த பாக்கியம் “அலுத்துப் போய் விட்டது. தண்ணீர்

www.tamilarangam.net

எடுத்து வா. கால் மணித்தியாலத்தில் கெதியாகக் கன்றை நட்டு விட்டேன்." என்று மகளிடம் கூறினார்.

தண்ணீர் கொண்டு வந்த ஜனனி "அம்மா, அண்ணா கன்று நட அரை மணித்தியாலம். நீங்கள் கன்று நட கால் மணித்தியாலம் ஆகின்றது. நீங்கள் இருவரும் சேர்ந்து ஒன்றாக நடத் தொடங்கினால் எவ்வளவு நேரம் செல்லும்?" என்று கேட்டாள். பாக்கியம் "முக்கால் மணித்தியாலத்தில் அரைவாசி" என்றாள். ரகு "இருபத்திரெண்டரை நிமிடம். சரிதானே! என்றான்.

"இரண்டு பேரும் பிழையாகச் சொல்கிறீர்கள்?" என்றாள் ஜனனி. சரியான விடையை எழுதுங்கள் பார்க்கலாம்.
சரியான விடைகளை எழுதியவர்களில் அதிஷ்டசாலிக்குப் பரிசு உண்டு.

சென்ற முறை வந்திருந்த "எத்தனை வைரங்கள்?" கதைக்கு இரண்டு பேர்கள் விடை எழுதியிருந்தார்கள்.
விடை: வைரங்கள்-301 திருடர்கள்: 43

1.கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
2.அபிராமி பரமேஸ்வரன் Denmark
சரியான விடை எழுதிய அபிராமிக்கு "ஓலைவெடி" என்னும் புத்தகம் பரிசாகக் கிடைக்கிறது. கிரிசாந்துக்கு எமது பாராட்டுக்கள்.

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

இட-வல
விரல்
சொற்பம்
படு
வேதனை
சுந்தரி
தரி
மன் (மன்னன், பெருமை)
காம்பு
மதகு
தகு
குலை
புசி
சிசு
கா
காவல்
வல (பெரிய, வலிமை)
தவறு
வறு
வந்தனம்
வந்த
தனம்
தவம்
ரகம்
கம்
பளை
பண்
மரை
இடி
வலை

அலகு
கும்மி
உதவி
தவி
விசை
சை
சைகை
கை
கைதி
உள்ளி

வல-இட
சொல்
சுனை (மலைஊற்றுநீர்)
ஆலை
மதி
காற்று
சுசி
கரம்
சல்லி
புனம் (மேடு)
இரை
மண்
களை
கரு
அலை
துதி
திகை

மே-கீழ்
விவேகானந்தர்
தம்
புசி
சிவம்
கலை
சுறுசுறுப்பு
புன் (கூடாத,, இழிந்த)
அசை
திரவம்
பல
பலகை
மறு
குதி
தக
தகல்
கல்
படகு
கானம்
சரை
மலை
இரு
இருள்
தென்
ஆல்
தோட்டி
களி

கீ-மேல்
உம்
உம்பர் (தேவர்)

தவளை
வளை
விலை
கனம்
வசி
புனை (அலங்காரம்)
அன்பு
பணம்
தும்மல்
மல் (வலிமை)
தரி
உமி
இமயம்
மயம்
வலை
மலை
மடு
கடி
தோணி
ஆன்

ஒன்றுக்கு மேற்பட்டு வந்த சொற்கள்:
தரி,கா.
வறு,வலை.
சை,கை,
மலை

www.tamilarangam.net

எழுதியவர்கள்:

1.முகுந்தன் மகேந்திரன் Berg.gladbach
2.ஜெயமாலா இரத்தினசபாபதி Eschelbronn
3.ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
4.மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
5.கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
6.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Münster
7.அபிராமி பரமேஸ்வரன் Denmark
8.விஜிதா விநாயகமூர்த்தி Denmark
9.விசிகரன் விநாயகமூர்த்தி Denmark
10.சிவகரன் விநாயகமூர்த்தி Denmark
11. தீபா ரவிக்குமார் Denmark
12. மஞ்சுளா சிவசம்பு Lohmar

அடையாளமிடப் பட்டவர் இம்முறைக்கான பரிசைப் பெற்றுக் கொண்டவர். இவருக்கு "வெள்ளிக் குழம்பு" என்னும் புத்தகம் பரிசாகக் கிடைக்கின்றது.

---

தான் என்ற கர்வம் உள்ளவன் கடவுளை இழந்து விடுகிறான். பொறாமை கொண்டவன் நண்பனை இழந்து விடுகிறான். கோபக்காரன் தன்னையே இழந்து விடுகிறான்.

-ஹால்-

---

www.tamilarangam.net



## நாலு கோடிப்பாடல்

புலம் பெயர்ந்து உலகளாவிய விதத்தில் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கும் நம் தமிழினம் தற்பொழுது தமிழ் வானொலி ஊடகங்கள் மூலமாகவும், தமிழை வளர்க்கக் கூடியதாக உள்ளது. வானலைகள் ஊடாக இரண்டுவயது மழலையின் மணிக்குரலில் திருக்குறள் உலகமெங்கும் ஒலிக்கிறது. வானொலியில் பங்கு பற்றுகின்ற ஒவ்வொரு மழலையும் பல எண்ணிக்கையில் திருக்குறள் சொல்லப் போகிறேன் என்று கூறும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்பதும் ஒரு திருக்குறளே.

உலகமொழியாக விளங்கும் திருக்குறளை எமக்குத் தந்தவர் திருவள்ளுவர். அதைப் போலவே பல நூல்களை இயற்றிய பெண் புலவர்களில் பெருமை பெற்றவர் ஔவையார்.

ஒரு நாள் ஔவையார் பாண்டி நாட்டிற்குப் போயிருந்த சமயத்தில் அந்நாட்டு மன்னன்

நாளை விடிவதற்குள் நாலு கோடிப் பாடல்கள் பாட வேண்டுமென்று புலவர்களுக்கு ஆணையிட்டான். இதைக் கேட்ட புலவர்கள் கதி கலங்கிப் போய் நிற்பதைப் பார்த்த ஔவையார், “நீங்கள் ஒன்றுக்கும் கலங்காமல் போய் நாளை வாருங்கள். நாளை நான் பாடலோடு வருகிறேன்.” என்று ஆறுதல் கூறிச் சென்றார்.

மறுநாட்காலை கையிலே ஏடும் கொண்டு செல்லாமல்கையை வீசிக் கொண்டு புன்னகையோடு நடந்து வந்த ஔவையாரைப் பார்த்துப் புலவர்கள் கலக்கமடைந்தனர். மன்னனுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டியதுதான் என்று புலவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர். அதேவேளை மன்னனும் இவர் நாலு கோடிப் பாடலை எப்படிப் பாடி முடிக்கப் போகிறார் என்று சிந்தித்துக் கொண்டிருந்த வேளையிலே, ஔவையார் எழுந்து

மதியாதார் முற்றம் மதித்தொரு காற் சென்று
மதியாமை கோடி பெறும்.
உண்ணீருண்ணீரென்று உபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்

www.tamilarangam.net

கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைய
நாக்(கு) கோடாமை கோடி பெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் நம்மோடு
கூடுதல் கோடி பெறும்

என்று நாலு குறளிலே நாலு நிமிடத்தில் நாலுகோடிப் பாடலைப் பாடி முடித்து மௌனமாக நின்றார்.

மன்னவனும் சபையோர்களும் திகைத்துப் போய் நின்று விட்டனர். பின் திகைப்பு மாறி மகிழ்ச்சி ஆரவாரம் வானைப் பிளந்தது. எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய முறையிலே இக்குறள் பாக்கள் திகழ்கின்றன. குறள் பாடலை பாடுவது மட்டுமல்லாமல் அதில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை நாம் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும்.

-முகுந்தன் மகேந்திரன்-

அன்பு சில குறைகளைப் பொருட்படுத்தாது. அறிவு சில பிழைகளைப் பொருட்படுத்தாது. ஆனால் உண்மை எந்த அவமானத்தையும் மன்னிக்க மாட்டாது.

-ரஸ்கின்-

www.tamilarangam.net



# சந்தேகம்

கந்தசாமி தன் மனைவியுடனும் பிள்ளைகளுடனும் பஸ் வண்டிக்காகக் காத்துக் கொண்டு நின்றார். அவர்களுடைய ஊருக்குச் செல்லும் பஸ் வண்டியும் வந்தது. பஸ் வண்டியில் ஒரே சனமாக இருந்தது. அதனால் இரண்டு வயதுள்ள குழந்தையை ஒரு தாத்தா வாங்கி வைத்திருந்தார். கந்தசாமிக்குச் சந்தேக புத்தி. தாத்தா வறுமையானவராகத் தோன்றியது தான் அதற்குக் காரணம்.

கந்தசாமி இறங்கும் இடம் வந்தது. வயதான தாத்தாவிடம் குழந்தையை வாங்கிக் கொண்டு கந்தசாமியும் மனைவியும் மற்றப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டு இறங்கினார்கள். இறங்கும்போது மனைவி "குழந்தையின் கையில் இருந்த காப்பில் ஒன்றைக் காணவில்லை" என்று சத்தம் போட்டாள். உடனே கந்தசாமி பஸ்ஸுக்குள்ளே திரும்பவும் ஏறினார்.

கிழவரைப் பார்த்து, "கள்ளக் கிழவா, உனக்குக் காசு வேணும் என்றால் கேட்டு வாங்குவது தானே!. குழந்தையின் கையில் இருக்கும் காப்பைத் திருடுவதா? இறங்கடா" என்று கோபத்தோடு திட்டிக் கொண்டே தாத்தாவைக் கீழே தரதரவென்று இறக்கிக்

www.tamilarangam.net

கொண்டு வந்தார். தாத்தா தான் எடுக்கவில்லை என்று சொல்லியும் கேட்காமல் அவரின் உடமைகளைக் கீழே கொட்டிச் சோதனை செய்தார்.

பஸ்வண்டிக்குள் இருந்த பயணிகளும் ஒன்றுமே பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தாத்தாவிடம் எதுவுமே இருக்கவில்லை. அப்போது பஸ்சாரதி "பஸ்வண்டிக்குள் ஒருதரம் பாருங்கள். கீழே விழுந்து இருக்கலாம்." என்றார். வண்டிக்குள் இருந்து குழந்தையின் காப்பைக் கண்டு பிடித்தார்கள்.

கந்தசாமியை எல்லோரும் பேசினார்கள். வயதான கிழவரை எல்லோரும் பரிதாபத்துடன் பார்த்தார்கள். கந்தசாமி பயணிகள் எல்லோர் முன்னும் தலை குனிந்து கொண்டார். தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அப்போது தாத்தா கந்தசாமியிடம், "தம்பி நீ மன்னிப்புக் கேட்பதால் மட்டும் நான் அவமானப்பட்டது போய் விடுமா? பட்டது பட்டதுதான். அறியாதவர்களைச் சந்தேகப்படலாம்.


நான் ஏழை என்பதால் சந்தேகப் பட்டதாகப் பேசினாய். ஏழையானால் தான் களவெடுப்பான் என்று ஏன் நினைக்கிறீர்கள்? பணக்காரர்கள் களவு செய்ய மாட்டார்களா! என்ன? எப்படியானாலும் யாராகத் தான் இருந்தாலும், கள்ளனாக இருந்தாலும் கூட விசாரிப்பதில் கண்ணியம் தேவை. பேச்சில் நிதானம் தேவை." என்று கூறி விட்டு பஸ்வண்டியில் ஏறிக் கொண்டார். கந்தசாமி தன்னைத்தானே நொந்து கொண்டு வழி நடந்தார்.

www.tamilarangam.net

*Nektar für die Kinder*

*Nectar pour les enfants*

*Nectar for the childrens*



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

**"Siruvar Amutham"**
**Alefstr- 11**
**50189 Elsdorf**
**GERMANY**
**02271 / 66527**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்